# September 27, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. தமிழக அரசின் தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்தை முதல்வர் ச.ஜோசப் விஜய் மதுரையில் திங்கள்கிழமை (செப். 28) தொடங்கிவைக்கிறார்.

(i) தமிழகத்தில் உள்ள அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்களில் பிறந்த குழந்தைகளுக்கு அரசு சார்பில் தாய்மாமன் தங்க மோதிரம் திட்டம் திங்கள்கிழமை (செப். 28) தொடங்கப்படும் என தமிழக அரசு அண்மையில் அறிவித்தது. 2026-ஆம் ஆண்டு, ஜூன் 22-ஆம் தேதி முதல் பிறந்த குழந்தைகளுக்கு இந்தத் திட்டத்தின் கீழ் தங்க மோதிரம் வழங்கப்படவுள்ளது.

(ii) இதற்கான தொடக்க விழா மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் திங்கள்கிழமை பகல் 12 மணிக்கு நடைபெறுகிறது. தமிழக முதல்வர் ஜோசப் விஜய் பங்கேற்று, முதல்கட்டமாக 30 குழந்தைகளுக்கு தங்க மோதிரங்களை அணிவித்து, தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்தைத் தொடங்கி வைக்கிறார்.

2. அமைதி வழித் தேவைகளுக்காக அணுசக்தியைப் பயன்படுத்துவதில் இருதரப்பு உறவை மேலும் வலுப்படுத்தும் நோக்கில், அமெரிக்காவுடன் முக்கிய புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் வங்கதேசம் கையொப்பமிட்டுள்ளது.

(i) அமெரிக்காவின் நியூயார்க் நகரில் நடைபெற்ற நிகழ்வில், வங்கதேச பிரதமரின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆலோசகர் ரெஹான் ஆசாத், அமெரிக்க பொருளாதார வளர்ச்சி, எரிசக்தி மற்றும் சுற்றுச்சூழல் துறைக்கான இணையமைச்சர் ஜேக்கப் ஹெல்பெர்க் ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டனர்.

(ii) நீண்டகால எரிசக்தி தேவைகளைப் பூர்த்தி செய்யவும், மின் உற்பத்திக்கான ஆதாரங்களைப் பல்வகைப் படுத்தவும் வங்க தேசம் தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. அந்நாட்டின் முதல் அணுமின் நிலையம் ரூப்பூரில் கட்டமைக்கப்பட்டு வரும் சூழலில், அணு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ரீதியிலான சர்வதேச ஒத்துழைப்பை விரிவுபடுத்துவதே இந்த ஒப்பந்தத்தின் முக்கிய நோக்கமாகும்.

(iii) சர்வதேச அணுசக்தி முகமையின் பாதுகாப்பு வழிகாட்டுதல்கள் மற்றும் அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தின் விதிகளை முழுமையாகப் பின்பற்றி, உச்சபட்ச பாதுகாப்புத் தரங்களுடன் இந்த அணுசக்தி ஒத்துழைப்பு முன்னெடுக்கப்படும் என இருநாடுகளும் உறுதிபூண்டுள்ளன.

(iv) முன்னதாக, கடந்த மே மாதத்தில் பரந்த அளவிலான எரிசக்தித் துறை ஒத்துழைப்புக்காக ஓர் ஒப்பந்தம் எட்டப்பட்டிருந்த நிலையில், தற்போது அமைதி வழி அணுசக்தி பயன்பாட்டை மட்டுமே பிரதான இலக்காகக் கொண்டு இந்த புதிய ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட் டுள்ளது.

3. குஜராத்தில் உள்ள தீனதயாள் துறைமுகம், அதானி குழுமத்தின் முந்த்ரா துறைமுகம், மகாராஷ்டிரத்தில் உள்ள ஜவாஹர்லால் நேரு துறைமுகம், ஒடிஸாவில் உள்ள பாரதீப் துறைமுகம் ஆகியவற்றை மாபெரும் துறை முகங்களாக மத்திய அரசு அறிவித்துள்ளது.

(i) இந்திய துறைமுகங்கள் சட்டம் 2025-இன் 73-ஆவது பிரிவு 1- ஆவது உட்பிரிவின் கீழ், ஒரு துறை முகத்தை மாபெரும் துறைமுகம் என்று வகைப்படுத்துவதற்கான தகுதிகளை மத்திய அரசு அறிவித்தது.

(ii) இதன்படி, முக்கியத் துறைமு கங்களான தீனதயாள் துறைமுகம், ஜவாஹர்லால் நேரு துறைமுகம், பாரதீப் துறைமுகம், முக்கியத் துறை முகங்கள் பட்டியலில் இல்லாத முந்த்ரா துறைமுகம் ஆகியவை அந்தத் தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ளன என்று அரசிதழ் அறிவிக்கையில் மத்திய துறைமுகங்கள், கப்பல் மற்றும் நீர்வழிப் போக்குவரத்து அமைச்சகம் தெரிவித்துள்ளது.

(iii) தற்போது இந்தியாவில் தீனதயாள், மும்பை, மொர்முகாவ், புதிய மங்களூரு, கொச்சி, சென்னை, காமராஜர் (எண்ணூர்), வ.உ.சிதம்பரனார், விசாகப்பட்டினம், பாரதீப், கொல்கத்தா (ஹல்தியா உள்பட), ஜவாஹர்லால் நேரு ஆகிய 12 முக்கியத் துறைமுகங்கள் உள்ளன.

4. முதல் காலாண்டில் ரூ.55,900 கோடி (595 கோடி டாலர்) அந்நிய நேரடி முதலீட்டை ஈர்த்து நாட்டிலேயே தமிழகம் முதலிடத்தில் உள்ளது.

(i) மத்திய தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறை வெளியிட்ட புள்ளிவிவரங்கள் இதைத் தெரிவிக்கின்றன.

(ii) நிகழ் நிதியாண்டின் ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான காலாண்டில் அந்நிய நேரடி முதலீட்டை ஈர்த்த முதல் 10 மாநிலங்களின் புள்ளிவிவரங்களை மத்திய அரசின் தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறை வெளியிட்டுள்ளது.

(iii) மகாராஷ்டிர மாநிலம் ரூ.39,800 கோடி (422 கோடி டாலர்) பெற்று 2-ஆம் இடத்திலும், தில்லி ரூ.25,203 கோடி (267 கோடி டாலர்) பெற்று மூன்றாம் இடத்திலும் உள்ளன.

(iv) துறை வாரியாக...:

- நாட்டில் சேவைத் துறை அதிகபட்சமாக 704 கோடி டாலர் முதலீட்டைப் பெற்று முதலிடத்திலும், கணினி மென்பொருள் மற்றும் வன்பொருள் துறை 284 கோடி டாலர் முதலீட்டைப் பெற்று 2-ஆம் இடத்திலும், வர்த்தகத் துறை 192 கோடி டாலர் முதலீட்டைப் பெற்று 3-ஆம் இடத்திலும், மரபுசாரா எரி சக்தி துறை 124 கோடி டாலரை பெற்று 4-ஆம் இடத்திலும் உள்ளன.
- இந்த காலகட்டத்தில் 571 கோடி டாலர் முதலீடுகள் ஜப்பானில் இருந்து பெறப்பட்டுள்ளன.
- அதிக முதலீடுகள் வந்த நாடுகள் பட்டியலில் ஜப்பான் முதலிடத்தில் உள்ளது.

அடுத்ததாக சிங்கப்பூரிலிருந்து 522 கோடி டாலரும், மோரீஷஸிலிருந்து 231 கோடி டாலரும், அமெரிக்காவிலிருந்து 134 கோடி டாலரும் இந்தியாவுக்கு முதலீடு வரப்பெற்றுள்ளன.

- மொத்த அந்நிய முதலீடு நிகழ் நிதியாண்டின் முதல் காலாண்டில் 3,065 கோடி டாலராக உயர்ந்துள்ளது.

**அந்நிய நேரடி முதலீடு 2026-2027**

**(ஏப்ரல் – ஜூன்)**

| மாநிலங்கள் | முதலீடு |
|---|---|
| தமிழ்நாடு | ரூ. 55,900 கோடி |
| மகாராஷ்டிரம் | ரூ. 39,800 கோடி |
| தில்லி | ரூ. 25,203 கோடி |
| கர்நாடகம் | ரூ. 19,857 கோடி |
| ஹரியானா | ரூ. 12,776 கோடி |
| தெலங்கானா | ரூ. 12,506 கோடி |
| குஜராத் | ரூ. 12,287 கோடி |
| உத்தர பிரதேசம் | ரூ. 538 கோடி |

| | |
|---|---|
| ராஜஸ்தான் | ரூ. 99 கோடி |
| ஜார்க்கண்ட் | ரூ. 1 கோடி |

5.தலைமைத் தேர்தல் ஆணையருக்கு எதிரான பதவி நீக்கத் தீர்மானம்: பதவி நீக்க விதிகள் என்ன கூறுகின்றன?

(i) தலைமைத் தேர்தல் ஆணையர் (CEC) கியானேஷ் குமார் மீது பதவி நீக்கத் தீர்மானம்

- காங்கிரஸ், சமாஜ்வாதி கட்சி உள்ளிட்ட ‘இந்தியா’ கூட்டணியைச் சேர்ந்த எதிர்க்கட்சிகள், வரும் நாடாளுமன்ற குளிர்காலக் கூட்டத்தொடரில் தலைமைத் தேர்தல் ஆணையர் கியானேஷ் குமாருக்கு எதிராக பதவி நீக்கத் தீர்மானம் கொண்டு வருவது குறித்து பரிசீலித்து வருகின்றன.
- தேர்தல் ஆணையம் தங்களது கோரிக்கைகள் மற்றும் குறைகளைத் தீர்க்கவோ, அவற்றைக் கருத்தில் கொள்ளவோ தவறிவிட்டதாக எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டுகின்றன.
- பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான உயர்நிலைக் குழுவால் கியானேஷ் குமார் மார்ச் 12 அன்று தலைமைத் தேர்தல் ஆணையராகத் தேர்வு செய்யப்பட்டார். இதையடுத்து, அவரது நியமனம் தொடர்பான அறிவிப்பை மத்திய அரசு வெளியிட்டது.

(ii) தலைமைத் தேர்தல் ஆணையரை (CEC) பதவி நீக்கும் அரசியலமைப்பு விதிகள் மற்றும் நடைமுறை

- இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவு 324(5)-ன் கீழ், தலைமைத் தேர்தல் ஆணையரைப் பதவி நீக்கும் நடைமுறை, உச்சநீதிமன்ற நீதிபதியைப் பதவி நீக்கும் நடைமுறைக்கு ஒத்ததாகும்.
- தலைமைத் தேர்தல் ஆணையரைப் பதவி நீக்குவதற்கு, மக்களவை மற்றும் மாநிலங்களவை ஆகிய இரு அவைகளிலும் சிறப்பு பெரும்பான்மையுடன் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும். அதாவது, ஒவ்வொரு அவையிலும் கலந்துகொண்டு வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கு (2/3) ஆதரவு தேவை.
- பதவி நீக்கத் தீர்மானம் கொண்டு வருவதற்கான குறிப்பிட்ட காரணங்களுக்கு ஆதரவாக உறுதியான ஆதாரங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
- மக்களவைத் தலைவர் அல்லது மாநிலங்களவைத் தலைவர் தீர்மானத்தை ஏற்றுக்கொண்டால், குற்றச்சாட்டுகளை விசாரிக்க மூன்று உறுப்பினர்களைக் கொண்ட குழு அமைக்கப்படும்.
- விசாரணைக் குழுவில்:

1. உச்சநீதிமன்ற நீதிபதி ஒருவர்
2. உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி ஒருவர்
3. சிறப்பு சட்ட வல்லுநர் (Distinguished Jurist) ஒருவர்

இடம்பெறுவர்.

- விசாரணைக் குழுவின் அறிக்கை நாடாளுமன்றத்தில் விவாதத்திற்காக சமர்ப்பிக்கப்படும்.
- விவாதத்திற்குப் பின்னர், இரு அவைகளும் தேவையான சிறப்பு பெரும்பான்மையுடன் பதவி நீக்கத் தீர்மானத்தை நிறைவேற்றினால், இந்திய குடியரசுத் தலைவர் தலைமைத் தேர்தல் ஆணையரைப் பதவி நீக்கும் உத்தரவைப் பிறப்பிப்பார்.

(iii) மற்ற தேர்தல் ஆணையர்களை (ECs) பதவி நீக்கும் விதிகளுடன் உள்ள வேறுபாடு

- மற்ற தேர்தல் ஆணையர்களை (Election Commissioners) பதவி நீக்கும் நடைமுறை முற்றிலும் மாறுபட்டது. அவர்களைப் பதவி நீக்க நாடாளுமன்றத்தின் ஒப்புதலோ அல்லது சிறப்பு பெரும்பான்மை வாக்கெடுப்போ தேவையில்லை.
- அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவு 324(5)-ன் கீழ், மற்ற தேர்தல் ஆணையர்களை குடியரசுத் தலைவர் தலைமைத் தேர்தல் ஆணையரின் பரிந்துரையின் அடிப்படையில் மட்டுமே பதவி நீக்க முடியும்.
- தலைமைத் தேர்தல் ஆணையரின் வெளிப்படையான பரிந்துரை இல்லாமல், மத்திய அரசால் மற்ற தேர்தல் ஆணையர்களை நேரடியாகப் பதவி நீக்க முடியாது.